**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**


# தகவல் பெறும் உரிமைச் சட்டம் Part 3

## தகவல் பெறும் உரிமைச் சட்டம்


கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)

முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்

Dr. Ragunathan, Assistant Professor





## தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கங்கள்

- அரசு அலுவலகங்கள், செயல்பாட்டிலும் வெளிப்படையான ஒளிவுமறைவற்ற அரசு நிர்வாகத்தைக் அளித்தல்
- அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களில் பணிபுரிபவர்களின் பொறுப்புணர்வை மேம்படுத்தி பணிகளை விரைவாக செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- எந்த ஒரு குடிமகனுக்கும் பதிலளிக்கும் கடமை அரசாங்கத்திற்கும் அதன் அதிகாரிகளுக்கும் உண்டு என்பதை உணரச் செய்தல்
- அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களின் செயல்பாடுகள் குறித்த தகவலைப்பெற விரும்பும் குடிமக்களுக்கு அதைக் கொடுக்க வழிவகை செய்தல்
- அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களிள் லஞ்ச-ஊழலைத் தடுத்தல்.

**தகவல் உரிமை என்றால் என்ன?**

**தகவலைப் பெறும் உரிமை**

தகவல் உரிமை என்பது இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு அரசு மற்றும் அரசு உதவிபெறும் நிறுவனத்தின் கையிலோ அல்லது கட்டுப்பாட்டிலோ உள்ள தகவலைத் தெரிந்து கொள்ளும் மற்றும் தகவலைப் பெறும் உரிமை என்கிறோம்.

அரசு அலுவலகத்திலுள்ள

- பணி ஆவணங்கள்
- பதிவேடுகளை மேலாய்வு செய்வதற்கு
- ஆவணங்கள்
- பதிவேடுகளின் குறிப்புகளை எடுத்தல்
- சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுதல்
- பொருட்களின் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளைப் பெறுதல். (எ.கா. – அரசு கட்டிடம் கட்டும் போது சிமெண்ட் கலவை மாதிரிகளைப் பெறுதல்)
- இப்படிப்பட்ட தகவலைக் கணினியில் அல்லது வேறு சாதனம் எதிலும் தகவல் பதிவு செய்யப்பட்டிருக்கும்பொழுது
- குறுந்தகடுகள்
- ஒலி நாடாக்கள்
- ஒலி-ஒளிக்காட்சி நாடாப் பேழைகள்
- மின்னஞ்சல் அச்செடுப்புகள்
- எந்த வடிவிலும்

தகவலைப்பெறும் உரிமையும் அதனையும் பெற்று கொள்ளலாம்.

**தகவல் உரிமை எதற்காக? ஏன்?**

இரகசியக் காப்புச் சட்டம் 1923 அரசின் செயல்பாடுகளை மூடி மறைக்கின்றது. இதை மாற்றி மக்கள் பங்கேற்பை உறுதி செய்து மக்களின் தேவைக்காக அரசை செயல்பட வைக்கப் பயன்படுகிறது.

இந்திய அரசியல் சாசன சட்டத்தில் குறிப்பிட்டுள்ள முக்கியமான குறிக்கோள்களான

- சமத்துவம்
- சமூகநீதி
- பாகுபடுத்தாமை
- இறையாண்மை
- வாழ்க்கைக்கான உரிமை
- சுதந்திரம் போன்ற அம்சங்களை நிறைவேற்ற தகவல் உரிமை அவசியமாகிறது.

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)

முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்

Posted 17th July 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
Labels: STUDY MATERIAL